COVID-19 தடுப்பூசிகள்

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

ஆகஸ்ட் 5, 2021 இல் கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது

எனக்கு ஏற்கனவே COVID-19 நோய் ஏற்பட்டிருந்தது. இருப்பினும் எனக்குத் தடுப்பூசி தேவையா?

ஆம். முன்னைய நோய்த்தொற்றின் நோயெதிர்ப்புச் சக்தி நீண்ட காலத்துக்கு நீடிக்காது. COVID-19 தொற்று மீண்டும் ஏற்படக் கூடும். சிறந்த பாதுகாப்புக்குத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் போட்டுக் கொள்ளவும்.

சிறந்த தடுப்பூசி எது?

கனடா சுகாதாரத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து COVID-19 தடுப்பூசிகளும் COVID-19 இனால் ஏற்படும் கடுமையான பாதிப்புகளைத் தடுக்கின்றன.

mRNA தடுப்பூசிகள் ஒன்றுக்கொன்று மாற்றப்படக் கூடியவையா?

இரண்டு mRNA தடுப்பூசிகளும் (Moderna மற்றும் Pfizer) ஒரே மாதிரியான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன, மேலும் தடுப்பூசிகளை மாற்றிப் போடுவது பாதுகாப்பானது. சிறந்த மற்றும் நீண்டகாலப் பாதுகாப்பிற்காக இரண்டு டோஸ்களைப் போட்டுக் கொள்வது முக்கியம்.

எனது உடற்திசுக்களையே தாக்கியழிக்கும் நோயெதிர்ப்பு நிலை (autoimmune) மற்றும்/அல்லது பிற உடல்நலப் பிரச்சினைகள் எனக்கு இருந்தால் தடுப்பூசி போடுவது பாதுகாப்பானதா?

ஆம். இதய நோய், ஆஸ்துமா, நீரிழிவு, மூட்டுவலி, புற்றுநோய் மற்றும் உடலுறுப்பு மாற்றப்பட்டது போன்ற பல்வேறு சுகாதார நிலைமைகள் உள்ள மக்களுக்கு மில்லியன் கணக்கான COVID-19 தடுப்பூசி அளவுகள் வழங்கப்பட்டுள்ளன. COVID-19 இன் கடுமையான நோய்ப் பாதிப்புகளிலிருந்து தடுப்பூசி உங்களைப் பாதுகாக்கும். உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், உங்கள் சுகாதார வழங்குநரிடம் பேசவும்.

COVID-19 தடுப்பூசிகள்

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

ஆகஸ்ட் 5, 2021 இல் கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது

ஒவ்வாமை உள்ளவர்களுக்குத் தடுப்பூசி பாதுகாப்பானதா?

முட்டை, ஜெலட்டின், பாதுகாப்பான்கள் அல்லது நுண்ணுயிர் எதிர்ப்பிகள் ஆகியன COVID-19 தடுப்பூசியில் இல்லை. தடுப்பூசியின் மூலப்பொருட்கள் உங்களுக்குப் பாதுகாப்பானதா என்பதை உறுதிப்படுத்த ஒரு சுகாதார வழங்குநர் உங்களுடன் கலந்துரையாடுவார். தடுப்பூசி போட்ட பின்னர், குறைந்தபட்சம் 15 நிமிடங்களுக்கு ஏதாவது எதிர்விளைவுகள் ஏற்படுகின்றதா என அறிய நீங்கள் கண்காணிக்கப்படுவீர்கள். எந்தவொரு எதிர்வினைக்கும் உடனடியாகச் சிகிச்சையளிக்கப்பட முடியும்.

தடுப்பூசிக்குப் பக்க விளைவுகள் உள்ளதா?

சிலருக்குத் தலைவலி, காய்ச்சல், குளிருணர்ச்சி அல்லது ஊசி போடப்பட்ட இடத்தில் வலி போன்ற லேசான பக்க விளைவுகள் இருக்கலாம். இரண்டாவது டோஸுக்குப் பின்னர் பக்க விளைவுகள் மிகவும் பொதுவானவை. எதிர்வினைகள் 1 முதல்3 நாட்கள் வரை நீடிக்கும். அறிகுறிகளைத் தணிப்பதற்கு மருந்துச் சீட்டு இன்றி நேரடியாக வாங்கக்கூடிய மருந்துகளைத் தடுப்பூசிக்குப் பின்னர் நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

நான் போதை மருந்துகள் அல்லது மதுபானம் பாவித்தால், தடுப்பூசி பெறுவது பாதுகாப்பானதா?

ஆம். நீங்கள் போதை மருந்துகள் அல்லது மதுபானம் பாவித்தாலும் தடுப்பூசி பெறுவது பாதுகாப்பானது.

இரண்டு டோஸ்களையும் பெற்ற பின்னர், நான் "வழமையான" நடவடிக்கைகளுக்குத் திரும்ப முடியுமா?

தடுப்பூசியின் இரண்டாவது டோஸுக்கு 2 வாரங்களுக்குப் பின்னரே முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டதாக மக்கள் கருதப்படுகின்றார்கள். அதிகமான மக்களுக்கு முழுமையாகத் தடுப்பூசி போடப்படும் வரை, மற்றவர்களிடமிருந்து குறைந்தபட்சம் 2 மீற்றர் தூர இடைவெளியை வைத்திருக்கவும். உட்புறமாக இருக்கும் பொது இடங்களில் அல்லது

COVID-19 தடுப்பூசிகள்

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

ஆகஸ்ட் 5, 2021 இல் கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது

வெளிப்புறங்களில் இருக்கும்போது, உங்கள் தனிநபர் இடைவெளி தூரத்தைக் கடைப்பிடிக்க அல்லது கைகளைக் கழுவ முடியாமல் இருந்தால், முகக்கவசத்தை அணிந்து கொள்ளவும்.

தடுப்பூசி போடப்படுவதனால் உண்டாகும் நன்மைகள் என்ன?

அதிகமான மக்களுக்குத் தடுப்பூசி போடப்படுவதனால், COVID-19 தொற்று எண்ணிக்கை குறைகின்றன, எனவே சில பொது சுகாதார நடவடிக்கைகள் நீக்கப்படலாம். அத்துடன் வணிகங்கள் மீண்டும் திறக்கப்படலாம். பின்வருவன உட்பட நாம் மகிழ்வுடன் அனுபவிக்கும் பல செயற்பாடுகளுக்கு நாம் அனைவரும் மீண்டும் திரும்ப முடியும் என்பதே இதன் பொருளாகும்:

- இலகுவில் பாதிக்கப்படக்கூடிய குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்களை மன அமைதியுடன் சந்தித்தல்
- பயணம் செய்தல்
- கலை, பொழுதுபோக்கு அல்லது விளையாட்டு நிகழ்வுகளில் கலந்துகொள்ளல்

தடுப்பூசி போட்டுக் கொள்வது, நமது சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பில் ஏற்படும் அழுத்தத்தையும் கூட, அறுவைச் சிகிச்சை மற்றும் பிற சிகிச்சைகளை மீண்டும் தொடங்குவதற்கு வசதியான வகையில் குறைக்கின்றது.

மேலதிகத் தகவல்களுக்கு toronto.ca/COVID19 ஐப் பார்வையிடவும் அல்லது 416-338-7600 எனும் எண்ணில் ரொறன்ரோ பொது சுகாதாரத்தை அழைக்கவும்.